Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (9-5-66) இதழ் 91

பராபவ சித்திரை 26 பிறை முஹர்ரம் 17 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

இந்தியா செல்லும்

### 15 இலங்கை அதிகாரிகள்

கணக்கு மதிப்பீடு சம்பந்தமாக 9 மாதம் பயிற்சி பெறும் பொருட்டு 15 அரசாங்க அதிகாரிகள் இந்தியா செல்கிறார்கள். கொழும்புத்திட்ட தொழில் நுட்ப கூட்டுறவின் கீழ் அவர்கள் பூரண பயிற்சி பெற்றுத் திரும்புவர். 1963, 1964-ம் ஆண்டுகளிலும் இலங்கை அதிகாரிகளுக்கு இவ்விஷயத்தில் இந்தியா பயிற்சியளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழி சட்டம்

# பல இலாகாக்களில் இன்னும் அமுலில்லை

## தமிழரசுக் கட்சிக்குழு கூட்டத்தில் அபிப்பிராயம்

### பிரதமரைப் பேட்டிகாண முடிவு

கொழும்பு, ஞாயிறு

தமிழ்மொழி (விசேஷ விதிகள்) சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வந்துவிட்ட போதிலும் அரசாங்க இலாகாக்கள் பலவற்றில் இன்னும் பழைய அரசாங்கத்தின கொள்கைகளே கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக இன்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த நிலைமையை நிவர்த்திசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி பிரதம மந்திரியையும் நிதி மந்திரியையும் கேட்டுக்கொள்வதென மேற்படி குழு முடிவு செய்தது.

சமீபத்தில் அமுலுக்கு வந்த தமிழ்மொழி (விசேஷ விதிகள்) சட்டத்தை அரசாங்க இலாகாக்களில் அனேகமானவை இன்னும் அமுல்நடத்தாததால் தமிழ் அரசாங்க ஊழியருக்கு முன்னர் இருந்தகஷ்டம் தொடர்ந்து இருந்து வருகிறதெனவும் இதை நிவர்த்திக்க உடனடி நடவடிக்கை எடுக்க நிதிமந்திரியையும் பிரதமரையும் கேட்டுக் கொள்வதெனவும் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபை கமிட்டி அறையில்நடந்த தமிழ்அரசுக்கட்சிபார்லிமெண்ட் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் சமூகம் தந்த தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள அரசாங்க இலாகாக்களில் தமிழ் ஊழியருக்கு இருக்கும் கஷ்டங்கள் பற்றி நீண்டநேரம் விவாதித்தார்கள்.

அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் வங்கிகளிலும் இன்னும் பழைய அரசாங்கத்தின் கொள்கைகளேகடைப்பிடிக்கப்படுவதாகவும் இதனல் தமிழ் ஊழியர்களுக்கு வேலை உயர்வுகளும், சம்பள உயர்வுகளும் தடைபட்டு வருவதாகவும்இருந்து வரும் புகார்கள் பற்றியும் குழு விவாதித்தது. இம்மாதிரி நிலைமை அரசாங்கஇலாகாக்கள் பலவற்றிலும் இருப்பதாக அங்கத்தவர்கள் பலர் கருத்து தெரிவித்தார்கள். தமிழ்மொழி சட்ட அமுல் பற்றி நிதிமந்திரியுடன்உடனடியாகப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதென முடிவுசெய்தது.

மாவட்டசபைகள் சம்பந்தமான நகல் சட்டம் தயாரிக்கப்பட்டு தமிழரசுக்கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்கு முன்னதாக மந்திரி சபையில் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும்கூட்டத்தில் கலந்துகொண்டஸ்தலஸ்தாபன மந்திரி திரு திருச்செல்வத்தை குழு கேட்டுக்கொண்டது. இச்சட்டம் சம்பந்தமான நகல் தயாராகிவிட்டதாகவும் விரைவில் அது பற்றிய விபரங்கள் வெளியிடப்படுமெனவும் மந்திரி பதிலளித்ததாகத் தெரிகின்றது

## எதிரி குற்றவாளியல்ல

### இருபாலை கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், திங்.

இருபாலை சிசுக்கொலை வழக்கில் எதிரி குற்றவாளியல்லவென ஜூரிகள் ஏகமனதாக தெரிவித்ததைத் தொடர்ந்து, நீதியரசர்நிதிமந்திரியின் உத்தரவு வரும் வரை எதிரியை ரிமாண்டில் வைக்குமாறு தீர்ப்பளித்தார்.

எதிரி கொலைச் செயலைச் செய்தாரென்றும், கொலை செய்யும் சமயம் மனநோயாளராக இருந்தபடியால் கொலைக் குற்றவாளியல்லவென்றும் ஜூரிகள் சபையினர் தெரிவித்தனர்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதியரசர் மேற்கண்டவாறு

(6-ம் பக்கம் பார்க்க)

## அரிசி மானியத்தை ரத்துசெய்யகோரிக்கை

### மந்திரி சபைக்கு சர் ராசீக் மகஜர்

கொழும்பு, ஞாயிறு

நாட்டின் நலனை உத்தேசித்து அரசாங்கம் அரிசிக்கு அளித்துவரும் மானியத்தை நிறுத்தும்படி நியமன எம். பி. சர் ராசிக் பரீத் வற்புறுத்தியுள்ளார்.

அரசாங்க எம். பி.க்களில் சிலரின் ஆதரவுடன் சர் ராசிச் பரீத் மந்திரிசபையிடம் சமர்ப்பித்துள்ளமகஜர் ஒன்றிலேயே இப்படியாகக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அரிசி மானியம் அரசாங்கத்துக்கு பெரிய பாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறதென்றும், இதனுலேயே இது நீக்கபட வேண்டுமென்றும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார்துறைஸ்தாபனங்கள் அரிசி ஒரு படி 75சதமாக வாங்க அனுமதிக்க வேண்டுமென்றும், கூப்பன்காரர்களுக்கு 25 சதமாக விற்கலாமென்றும் மகஜரில் மேலும்தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரிசிமானியத்தை வாபஸ் பெறுவதன் மூலம் தான் இந்நாட்டின்சுபீட்சத்தை உயர்த்தலாமென்றும் சர் ராசிக் பரீத் அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

## தென்னிந்திய நட்சத்திரங்களின் கிரிக்கெட் போட்டி

### யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்.

பிரபல தென்னிந்திய நட்சத்திரங்கள் கலந்துகொள்ளும் கிரிக்கெட்போட்டி ஒன்று வருகிற ஜுலை மாதத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண விளையாட்டு அரங்கைப் பூர்த்திசெய்வதற்கும், நீச்சல்தடாகம் ஒன்றை உருவாக்குவதற்கும் நிதிசேர்ப்பதற்கே இங்கு தென்னிந்திய நட்சத்திரங்கள் வந்து கிரிக்கெட் போட்டியொன்றை நடத்தவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த எஸ். எஸ். ஆர். இவ்வித நட்சத்திர கிரிக்கெட்போட்டியொன்றை இங்கு நடத்இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனை யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, யாழ்ப்பாணப் பகுதிக் காரியாதிகாரியும், யாழ். பிரதேசக் கலாமன்றச்செயலாளருமான திரு. எஸ். சிவஞானம் ஆகியோர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே நடிகர் துவதற்கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்வதாக உறுதி

(6-ம் பக்கம் பார்க்க)

## பாழடைந்த விகாரையின் அருகில் சிவலிங்கம்!

### கந்தரோடையில் புதைபொருள் ஆராய்ச்சி

சுன்னுகம் ஞாயிறு

கந்தரோடையில் புதைபொருளாராய்ச்சியாளர்கள் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியின் பயனுக ஒரு பாழடைந்த விகாரையின் அடித்தளத்தையும், அதற்கருகாமையில் ஒரு சிவலிங்கத்தையும் கண்டுபிடித்துள்ளனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் போல்பீரிஸ்செய்த ஆராயச்சியின் முடிவைக் கொண்டு புதைபொருள் ஆராய்ச்சிப்பகுதியினர் கந்தரோடையில் கடந்த ஒரு மாத காலமாக ஆராய்ச்சி நடத்துகின்றனர். இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர்இப்பகுதியில்நடந்த சம்பவங்கள்கற்களில்செதுக்கியும் மக்கள் அணிந்த ஆபரணங்கள் சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றன. தாதுகோபுரங்களின் தூண்கள், படிக்கற்கள் முதிரைக் கற்களினுல் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்து காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதி அதிகாரிகள் [illegible] யில் நடைபெறும் [illegible] கண்டுபிடிப்புகளை பலர்

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்து பல்கலைக்கழக விஷயம்

### மகாநாயக்க தேரோ பிரதமரிடம் வற்புறுத்தியுள்ளார்

கொள்ளுப்பிட்டி, ஞாயிறு

இந்து பல்கலைக் கழகம் ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் தாம் வற்புறுத்தியிருப்பதாக மல்வத்தை பீடதிபதி மகாநாயக்காதேரோ தெரிவித்துள்ளார்.

சர்வ சமய காங்கிரஸ் பிரதிநிதிகள் இவரைச் சந்தித்தபோதே மேற்கண்ட தகவலை மல்வத்தை அதிபர் வெளியிட்டார். இந்த பிரதிநிதிகள் கோஷ்டியில் திருவாளர்கள் டி. எல். எவ். பெற்றிஸ், எஸ். எம். ஏ. ரசீக், எஸ். என். பி. விஜயக்கூனும் மற்றும் சிலரும் அங்கம் வகித்தனர்.

அமைக்கப்படும் இந்துப் பல்கலைக்கழகம் இந்துகலாச்சார அடிப்படையிலேயே இயங்க வேண்டுமென்றும் தாம் பிரதமரிடம் கேட்டுக் கொண்டதாகவும் தம்மைச் சந்தித்த பிரதிநிதிகளிடம் அவர் மேலும் கூறினுர்.

தாம் தெரிவித்த விஷயங்கள் பற்றிபிரதமர்யோசனை செய்துவருவதாகவும் மல்வத்தை அதிபர் பிரதிநிதிகளிடம் கூறினர்.

## ரயில்-லாரி விபத்து! இருவர் பலி!

### முருகண்டிக்கு அருகாமையில் சம்பவம்

கிளிநொச்சி, ஞாயிறு

இன்று அதிகாலை காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற 'யாழ்தேவி'யும், லாரி யொன்றும் முறிகண்டிக்கருகாமையில் மோதிக்கொண்டதால் லாரி பலத்த சேதத்துக்குள்ளானதுடன், லாரியில் பிரயாணம் செய்த இருவர் மரணமடைந்தனர்.

[illegible] ந்து வந்துகொண்டிருந்த கிளிநொச்சி காணி இலாகாவுக்குச் சொந்தமான லாரி ரயில் வருவது தெரியாமல் பாதுகாப்பற்ற ரயில்வேகடவையை கடக்க முயன்றபோதே இந்தவிபத்துஇடம் பெற்றது. லாரியின் பின்பக்கமே பலத்த சேதத்துக்குள்ளானது. லாரியில் வந்து கொண்டிருந்த 9 பேர்களில் இருவர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டசில மணி நேரங்களிலேயேமரணத்துக்குள்ளானுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நம்மில் பலரும் வேரில்லாத மரம்போல், இயற்கையுடனே, மக்களுடனே, தெய்வத்துடனே எவ்வித பற்றுக்கோடுமின்றி தனிமையில் தவிக்கின்றேம். ஜனநாயக வாழ்க்கைமுறை பாதுகாக்கப்படவேண்டில், ஆன்மீக நம்பிக்கையைப் பலப்படுத்துவதன் மூலம் இந்தத் தனிமை தீர்த்து மக்களுடன் நல்லுறவு ஏற்படவேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 347

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 26உ (9-5-66)


## சர்வகலாசாலை உடன் தேவை

வடக்கு, கிழக்குமாகாணங்களிலே சர்வகலாசாலை வசதியில்லாமையால், தமிழ் மாணவ மாணவிகள் உயர்தரக் கல்வி கற்கப் பேராதனை அல்லது கொழும்புக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் அதிக செலவும், வசதிக்குறைவும் ஏற்படுவது ஒருபுறமிருக்க, அங்கு அவர்களுக்குப் பலவித தீமைகளும் ஏற்படுவதாகவும் கிடைக்கும் செய்திகள் கவலையளிப்பதாக உள்ளன.

இலவசக்கல்வியின் பயனாக அதிகமான மாணவ மாணவிகள் சர்வகலாசாலைக் கல்வி கற்கத் தேர்ச்சிபெறுகின்றார்கள். பேராதனையிலோ கொழும்பிலோ போதிய இடம் இல்லை இதற்காகக் கடுமையான புதிய நிபந்தனைகளைப்போட்டு மாணவ மாணவிகளுக்கு உயர்தரக்கல்வி கிடைக்கமுடியாமல் தடுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றனவாம். இப்புகார் உண்மையாயின் அது நம் எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் செய்யும் பாவமாகும். திறமையிருந்தும் இங்கு இடம் கிடைக்காமல் இந்தியாவுக்குச் சென்றுவது சர்வகலாசாலைப் படிப்புப் படிக்கலாமென்று பல மாணவர்களும் தவிக்கின்றனர். அதற்கும் எவ்வளவோ முட்டுக்கட்டைகள்.

பேராதனையிலோ, கொழும்பிலோ சர்வகலாசாலை வகுப்புகளில் சேர முடிந்த நம் மாணவ மாணவிகளில் பெரும்பாலோருக்கு தங்கியிருக்க இடவசதிகள் இல்லாமல், விரும்பத்தகாத வீடுகளிலே, சுகாதாரமற்ற சூழ்நிலையில் அவர்கள் அதிகமான வாடகை செலுத்தி வசிக்கவேண்டியிருப்பதாயும், புதிய இடத்திலே, பல ஆபத்துகளுக்கு அவர்கள் பலியாகவும் நேரிடுவதாகவும் சில தகவல்கள் கூறுகின்றது. உயர்தரக்கல்வி கற்பதற்காக அதிக பணச்செலவுசெய்து, வீட்டைவிட்டு வெகுதூரம் செல்லும் நம் மாணவ மாணவிகளின் நன்மையைப் பாதுகாக்கவேண்டும். தீய நோக்கத்துடன் விடுதிகளை அமைத்து நம் மாணவ மாணவிகளைப் பலியாக்காமல் தடுக்க, லைசென்ஸ் பெற்றவர்களே அவ்விடுதிகளை நடத்தலாமென்று சட்டம் செய்யவேண்டும். சர்வகலாசாலையின் கண்காணிப்பில் மாணவ விடுதிகள் இருப்பது பலவிதங்களிலும் அவசியமாகும்.

கொழும்பிலே மூன்று சர்வகலாசாலைகளும் பேராதனையில் ஒன்றும் இருக்கையில் தமிழ்பேசும் பகுதியிலே ஒரு பல்கலைக் கழகம்கூட இல்லாதது பெரிய குறை அரசாங்கம் இக்குறையைத் தீர்க்கத் தயாராக இருப்பினும் தமிழ்த்தலைவர்களிடையே ஒற்றுமை ஏற்படாததைச் சாக்கிட்டு இப்பகுதியில் ஒரு சர்வகலாசாலை அமைக்கப்பட முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு சாரினர் தமிழ் சர்வகலாசாலை வேண்டுமென்று கேட்டு திருக்கோணமலையிலே இதற்காக நிலம் வாங்கிப் பல கட்டடங்களையும் கட்டியுள்ளதாகத் தெரிகிறது. மற்றோரு கட்சியினரோ இந்து சர்வகலாசாலை வேண்டுமென்று கேட்கின்றனர். இரு கட்சிகளுக்கும் உள்ள இவ்வேற்றுமை காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு சர்வகலாசாலையையும் அமைக்க அரசாங்கம் முன்வர மறுக்கிறது.

இப்பகுதிகளில் இரண்டு சர்வகலாசாலைகளும் அமைக்க இடமுண்டு. ஆனால் அரசாங்கம் இதற்குச் சம்மதிக்குமா? ஆகவே நமது மாணவ, மாணவிகளின் மேலான நன்மையைக்கருதி, இருகட்சித் தலைவர்களும் நேரில் சந்தித்து, கலந்துபேசி, ஒரு சமரசத் தீர்மானத்திற்கு வரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இது மிக அவசரமான விஷயம். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஆகவே விரிந்த மனப்பான்மையுடனே தமிழ்த் தலைவர்கள் தங்கள் வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். மற்றவர்கள் கண்டு நகைக்கும்படியாகவோ தமிழ் சமூகத்துக்கேதீங்கு ஏற்படும்படியாகவோ தமிழ் தலைவர்கள் செய்யமாட்டார்களென்றே நம்புகிறேம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே, விஞ்ஞானமுள்ளிட்டு சர்வ கலைகளையும் கற்பிக்கக்கூடிய முதல் தரமான நவீன சர்வகலாசாலையே வேண்டும். இதுபற்றி தமிழரிடையே கருத்துவேற்றுமை இருக்க முடியாது. தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையாக வற்புறுத்தினால், தேசிய அரசாங்கம் நியாயமான இந்தக் கோரிக்கையை மறுக்கமுடியாது. தமிழ் அல்லது இந்து என்ற சொற்களைவிட்டு, பொதுவான ஒரு பெயரில் இச்சர்வகலாசாலையை அமைக்கக்கூடாதா? இப்புதிய சர்வகலாசாலை எவ்வளவு சீக்கிரம் அமைக்கப்படுகிறதோ, அவ்வளவும், பேராதனை, கொழும்புப் பகுதிகளிலேயுள்ள சர்வகலாசாலைஇடநெருக்கடியைக் குறைப்பதுடன், தமிழரின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் தேசியஅரசாங்கம் பெறக்கூடியதாக இருக்கும்.

# சர்வோதயமே சமுதாய வழிகாட்டி

**சர்வோதயசிரமதானமகாநாடுசமீபத்தில் இலங்கையில் நடைபெற்றது. இந்தஇயக்கம் இப்போது தீவிரமடைந்துவரும் வேளையில் விநோபாஜியுடன் சேர்ந்து தொண்டாற்றிவரும் பிரபல தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயணின் சொற்பொழிவு ஒன்றைகீழே தருகிறேம்.**

நம் நாட்டில் பண்டைக் காலத்தில் கட்சி அரசியல் பூசல்கள் ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடிய முறையிலான ஒரு சமுதாய அமைப்பை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். முன்னைய மக்கள் ஆட்கியில் சண்டை சச்சரவுகளைத் தங்களுக்குள்ளேயே பேசிச் சமரசம் செய்து வந்தார்கள். ஆனால் இன்று மேலை நாட்டு ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு நச்சே கிராமந்தோறும் பரவிவிட்டது. அதன் காரணமாகத் தினந்தோறும் சண்டைகளும் வழக்குகளும் —துப்பாக்கிச் சூடுகளும்கூட நிகழ்ந்துவருகின்றன. கிராமதான கிராமங்களில் கிராமசபைகளில் ஒருமனதான முடிவுகளைச் செய்யும் முறையைக் கைக்கொள்ளுவதன் மூலம் இன்றையக் கெடுதல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்".

### உண்மை அடிப்படையில்

"சர்வோதயம் உண்மையின் அடிப்படையில் ஒரு சமுதாயத்தை நிறுவ விரும்புகிறது. நிலத்தின் பேரில் தனி உடைமை பொய்யான நிலையற்ற கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டது. ஆகையால் அதைப்போக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும். சமுதாயத்திலுள்ள செல்வங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பின் மூலமும்தான்உற்பத்தியாகின்றன. ஆகையால் நிலம், சுரங்கம், தொழில்கள் ஆகிய ற்றில் தனிநபர் ஆதிக்கமோ உரிமையோ இருக்கவே கூடாது. குடியானவனும்கூட உணவுத் தானியத்தைத்தானே உற்பத்திசெய்வதாகக் கூறிக்கொள்ள முடியாது. ஒரு தானியத்தை 100தானியங்களாகப் பெருக்குவது அவனுடைய செயலுக்கு அப்பாற்பட்டதாகும். அவன் உழும் கலப்பையை உருவாக்குவதில்எத்தனை கைகள் ஈடுபட்டன? என்று அவனுக்கே தெரியாது. ஆகையால் எல்லா வளங்களும் சமுதாயத்திற்குச் சொந்தமானவையே. அவ்வாறு ஆகவும் வேண்டும். அதிலும் அதிகமாகத் தேவைப்படும் மக்களுக்கு அதிகமாகக் கிடைக்கவேண்டும்.

### சக்தியை உணரவேண்டும்

சுதந்திரம் கிடைத்த பின்னர் மக்களின் ஆற்றல் குறைந்து விட்டது. அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மக்கள் செய்யவேண்டிய வேலையைஇப்போது மக்கள் அரசாங்கத்திற்கே விட்டுவிட்டார்கள். உண்மையில் அரசாங்கத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால்மக்களுடைய சக்தி எவ்வளவோ அதிகமாகும். மக்களிடம் பொதிந்திருக்கும் ஆற்றலைக் காந்தியடிகள் உணரச்செய்தார், இன்று விநோபாஜியும் அதே முறையில் வழிகாட்டி வருகிறார்.

### சர்வாதிகாரம் தார்மீகத் தாழ்வே

இன்றுள்ள நெருக்கடி நிலையில் அரசுத்துறையும் மக்களும் எந்த அளவுக்கு உண்மை, உழைப்பு தீவிரம் ஆகியவற்றுடன் செயல்படவேண்டுமோ அகூவாறு செயல்படவில்லை. கவிதைகள் முழக்கங்கள் மூலம் மட்டும் நாட்டைப் பாதுகாத்துவிடமுடியாது. அதற்குச் சிறப்பான முறையில் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். இன்று இலஞ்ச ஊழலை ஒழிக்க சர்வாதிகாரம் தேவை என்று நினைக்கிறார்கள். ஆனால் சர்வாதிகாரமோ தார்மீக வீழ்ச்சிக்கே வழிகோலுவதாகும். அதற்கு இலஞ்ச ஊழலை ஒழிக்கும் சக்தி கிடையாது. சர்வாதிகார ஆட்சியில் இலஞ்ச ஊழல்கள் புதுப்புது உருவில் வெளிப்படும். ரஷ்யத் தொழில்களில் கோடிக்கணக்கான ரூபிள்கள் சென்ற இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இலஞ்ச ஊழல்கள் போகவேண்டுமெனில் மக்களிடையே விழிப்பு ஏற்படவேண்டுவது அவசியம்.

### சிரமதானம்தான் மருந்து

இன்று நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் சோஷலிச முழக்கமிடுகின்றன. ஆனால் ஏற்றத்தாழ்வு என்னவோ அதிகரித்துக் கொண்டுதான் போகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்கள் மனோபாவத்தில் தனிநபர் உடைமை ஆழ்ந்து இடம் பெற்றுள்ளதுதான். நாட்டில் உருவாகிவரும் போர் மனோபாவம், சண்டை சச்சரவுகள், நிர்ப்பந்தங்கள், இம்சையின்மூலம் தீர்வு காணும் மனோபாவம் ஆகியவைகளிடமிருந்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உலகப் பிரச்னைகளையும் நாடுகளுக்கிடையான பிரச்னைகளையும் அமைதியான வழிகளில் தீர்க்க முயலவேண்டும். சர்வோதய இயக்கத்தில் இணைந்த சாந்திசேனைக் கொள்கையும் திட்டமும் இதற்கு அனுகூலமான சூழ்நிலை உருவாக்க முயன்று வருகிறது.

### இன்று

# செக்கோஸ்லவேக்கிய தினம்

இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் செக்கோஸ்லவேக்கியாசுதந்திர நாடாகியது. செக். நாட்டு விடுதலைக்கு சோவியத் படையினர் ஆற்றிய பணி சரித்திர முக்கியத்துவம் பெற்றது. விடுதலைபெற்ற செக்கோஸ்லேவிய மக்கள் தங்களுக்கு எந்தவகையான ஆட்சிமுறை வேண்டுமென்பதை அவர்களாகவே தீர்மானித்துக் கொண்டனர். நாடு முழுவதும் தொழிலாளர் சபைகள் நிறுவப்பட்டன. தேசிய கமிட்டிகளும் விடுதலை பெற்ற பகுதிகளில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

விடுதலையின்பின்னர் நாட்டில் கடுமையான நிலசீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. கைத்தொழில் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் பெருமளவு அக்கறை காண்பிக்கப்பட்டது. விவசாயத்துறை இயந்திர மயமாக்கப்பட்டது, உற்பத்திப் பெருக்கும், தொழில்வசதிகளும்சம்பளஉயர்வும்சேர்ந்து செக். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தின. நாட்டின்நிர்வாகத்திலும், பொருளாதார முன்னேற்றத்திலும் தொழிலாளர்கள்கூடிய பங்கு கொள்ளக்கூடிய

(5ம் பக்கம்பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

ரயில் வண்டிகளும் பஸ் வண்டிகளும் ஒழுங்காக நேரம் தவறி வந்துபோவதைக் கண்டு மனம் வெதும்பிய பிரயாணிகள் அழல் கொண்டு அவற்றின் மீது வசைபுராணம் பாடுவதை சித்தரித்து எழுத்தாளர்களும் கேலிச் சித்திரம் வரைபவர்களும் எத்தனையோவிதமான கட்டுக்கதைகளையும் பகிடிகளையும் அடிக்கடி அவிழ்த்துவிடுவார்கள். இந்த வகையறுவில் சமீபத்தில் ஓர் ஆங்கிலப்பத்திரிகைவெளியிட்ட ஒரு கதையை உங்களுக்கும் தெரிவிக்க ஆவலாய் இருக்கிறது.

ஒவ்வொருநாளும் ரயில் பிரயாணம் செய்யும் ஒருவர் ரயில்வண்டிகள் நேரம் தாமதித்து வருவதை சகிக்க முடியாமல் தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தாராம். அந்தப் பாபத்தை ரயிலின் தலையிலேயே போட்டு வஞ்சம் தீர்த்துக்கொள்ள எண்ணி ரயில் இரண்டு மைலுக்கப்பால் வரும்போதே தண்டவாளத்தில் நீட்டிநிமிர்ந்து படுத்துவிட்டாராம். ரயிலும் ஒருவாறு வந்து சேர்ந்தது. சாரதி பாதையில் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டு ரயிலை நிற்பாட்டிவிட்டு இறங்கிப் போய் பார்த்தபோது அந்தப் பாவி பிரயாணி பசியாலும் களைப்பாலும் செத்துப்போயிருப்பதைக் கண்டாராம்! ரயில் சீக்கிரமே வந்துவிடும். அதன் சக்கரங்கள் விரைவில் கழுத்தை நெரித்துவிடும் என்று காத்திருந்தபடியே அம்மனிதன் பசிப்பிணியால்மாண்டுபோனான். ரயிலின் வேகம் எப்படி!

ஃ ஃ ஃ

1663-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஆயுதம்தாங்கிய ஒரு கொள்ளைக்கூட்டத்தினர் ஒரு ரயிலை வழிமறித்து சுமார் 3 1/2 கோடி ரூபாயைஅடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அடுத்த வருடம் நடைபெற்ற வழக்கில் ஏழு பேருக்கு 30வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இவர்களில் இரண்டுபேர் சிறையில் இருந்து தப்பியோடிவிட்டார்கள். வேறொருவர் சென்றமாதம்தான் கைது செய்யப்பட்டு இப்பொழுது அவர் மீதுவழக்குநடக்கிறது கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக்கருதப்படும் மிகமுக்கியமான இருவரை பொலிசார் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

லண்டனிலுள்ள 'ஸ்கொட்லண்ட்யாட்' துப்பறியும் பொலிசார் உலகிலேயே மிகப் பிரபலமானவர்கள். இலங்கையின் துப்பறியும் புலிகளும் அங்கேதான் விசேஷ பயிற்சிபெற்றவர்கள். இங்கிலாந்து பொலிஸாரே குற்றம்செய்தவர்களைக் கண்டுபிடிக்கமுடியாமல் இருக்கும்போது நமது இலங்கைப்பொலிஸார்சமீபகாலத்தில் இங்கு நிகழ்ந்த படுமோசமான கொலைகளில் ஒன்றும் செய்யமுடியாமல் தவிப்பது அவ்வளவு பாரதூரமான விஷயமல்லஎன்று நினைக்கத்தோன்றுகிறது. இதனால் இங்குள்ள பொலிசார் செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார்கள் என்றும் கூறமுடியாது.

செல்வாக்குள்ள சிலர் பொலிஸாரின் முயற்சிகளைப் பங்கப்படுத்தி இடையூறாக நிற்கிறார்கள் என்றும் வதந்திகள் அடிபடுகின்றன. ஆனால் இம்மாதிரியான கொடூர கொலைவழக்குகளில் பொலிஸார் பெரியவர், சிறியவர், செல்வன், ஏழை என்ற பாரபட்சம் காட்டாமல் நீதி ஒன்றையே குறிக்கோளாகவைத்து நேர்மையாகக் கடமையாற்றவேண்டும்.

--வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சந்திரனை ராணுவ நோக்கிற்கு பயன்படுத்தக் கூடாது" ரஷ்யாவுக்கு திரு. ஜோன்ஸன் வேண்டுகோள்

## இதரநாடுகளுடன் பேச்சு நடத்தவும் முடிவு

வாஷிங்டன், மே 8

**சந்திரனையும், இதர கிரகங்களையும் ராணுவ நடவடிக்கைக்குத் தடைசெய்யும் உடன்படிக்கை ஒன்றில் அமெரிக்காவும், ரஷ்யாவும், இதர வான வெளிநாடுகளும் கையெழுத்திடவேண்டுமென ஜனாதிபதி ஜோன்ஸன் கேட்டிருக்கிறார்.**

இந்தக்கிரகங்களை அணு ஆயுததளங்களாகவோ அல்லது வேறு ராணுவ நடவடிக்கைகளுக்கோ எவரும் பயன்படுத்தக் கூடாதென்றும், எவரும் இக்கிரகங்களுக்கு உரிமை கொண்டாடக்கூடாதென்றும் கோரும் உடன்படிக்கை குறித்து, ஐ நா. விலுள்ள இதர நாடுகளுடன் பேச்சு நடத்தும்படியும் அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஆதர் கோல்ட்பர்க்குக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

வான்வெளி, சமாதானக் காரியங்களுக்காக மட்டுமே சகலநாடுகளாலும் பயன்படுத்தப்படவேண்டுமென திரு. ஜோன்ஸன் குறிப்பிட்டார்.

இவ்வித உடன்படிக்கை ஒன்றுக்கு யோசனை கூறப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

28 நாடுகளைக்கொண்ட ஐ. நா. வான் வெளிக்கமிட்டியில் முதலிலும், பின்பு வானவெளி நாடுகளிக்கிடையிலும்உடன்படிக்கை ஏற்படுத்துவது பற்றி விவாதிக்கப்படுமெனக் கூறப்பட்டது.

சமாதானக் காரியத்துக்கு அல்லது இதர வகையில் வானவெளியை உபயோகிப்பதை சட்டவிரோதமாக்க வேண்டுமென்பதும் அமெரிக்காவின் யோசனை.

---

"தேர்தலுக்குப்பின்

## ஆட்சியை தராவிட்டால் மீண்டும் குழப்பம்!'

### தென் வியட்னும் பிரதமருக்கு டாணுங் மேயர் எச்சரிக்கை

டாணுங், மே 8

வியட்னுமில் தேர்தல் நடந்தபின் சிவிலியன்களிடம் அரசாங்கத்தை ஒப்படைக்காமல் ராணுவ ஆட்சி தொடர்ந்து நீடித்தால் அதனல் பெருங் குழப்பமே ஏற்படும் என டாணுங் மேயர் எச்சரித்திருக்கிறார்.

மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யமட்டுமே தேர்தல் நடத்துவதாயும், ஆனல் தேர்தலுக்குப்பின் ஒரு வருடம் ராணுவ அரசாங்கம் நீடிக்கும் என்றும் பிரதமர் கீ கூறியதை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கிடையில் வட வியட்னுமுக்கும் சீனவுக்குமிடையேயான பிரதான சப்ளை பாதையை அமெரிக்க விமானங்கள் அழித்துவிட்டதாகக் கூறப்பட்டது.

பிரதமரின் அறிக்கையைத் தொடர்ந்து பௌத்த தலைவர்களும் இதனல் கிளர்ச்சியடைந்திருப்பதாய்க் கூறப்படுகிறது.

---

## ஆயுத பரிகரணத்திற்கு சர்வதேச மகாநாடு

### டிட்டோ - நாஸர் யோசனை

கெய்ரோ, மே 8

**ஆயுதப்பரிகரணம் சம்பந்தமாக சர்வதேச மகாநாடு ஒன்றை நடத்தவேண்டும் என்றும், சகல நாடுகளும் இதில் சிரத்தை காட்டினல் தாங்கள் இதைக் கூட்ட வழிசெய்வதாயும் யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோவும், ஐக்கியஅராபியக் குடியரசு அதிபர் நாஸரும் கூறியிருக்கிறார்கள்.**

இரு தலைவர்களும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் மேற்கண்ட யோசனை கூறப்பட்டிருக்கிறது.

சமாதானத்துக்கு வழி செய்யும் முயற்சியில் சகல நாடுகளும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். படைபலத்தின் மூலம் சமாதானத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளை அவர்கள் எதிர்த்திருக்கிறார்கள்.

வடவியட்னும் மீது அமெரிக்கா குண்டு வீச்சு நிறுத்தப்படவேண்டும் என்றும், சமாதான சகவாழ்வுப்படி நாடுகள் தங்களிடையே உறவுகளை வளர்க்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உலக பதற்றம் ஆசியாவில் மையம்கொண்டிருப்பதாக இரு தலைவர்களும் கருத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மார்ஷல் டிட்டோ தாயகப் புறப்படுமுன் நிருபர் மகாநாட்டில் பேசியபோது இந்தியப்பிரதமர் இந்திரா காந்தியுடன் பேச்சுநடத்த தானும், ஜனதிபதி நாஸரும் விருப்பம்கொண்டிருப்பதாயும், இந்தப் பேச்சுக்கள் பயனுள்ளவையாக இருக்கும் என்றும் கூறினர்.

---

ரஷ்யாவுக்கு

## அசோக்மேத்தாவின் அடுத்த பயணம்

புதுடில்லி, மே 8

இந்தியாவுக்கு உதவிபெறுவது சம்பந்தமாகப் பேச்சு நடத்தும்பொருட்டு திட்ட மந்திரி திரு. அசோக்மேத்தா அடுத்த மாதம் ரஷ்யா செல்வாரென அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவிலும் கனடாவிலும் 3 வாரங்கள் பொருளாதார உதவிபற்றிப் பேச்சுநடத்திய அவர் இன்று காலை புதுடில்லி வந்துசேர்ந்தார்.

வழியில் லண்டனிலும், மாஸ்கோவிலும் சிறிது தங்கினர்.

## மீஸோ பகுதியில்

புதுடில்லி, மே. 8

மீஸோமலை ஜில்லாவில் மாமூல்நிலை ஏற்பட்டுவருகிறது

200க்கு அதிகமானேர் அங்கு கைதுசெய்யப்பட்டதாயும் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது. மேலும் தேடுதல்வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

தேயிலைத்தோட்டம் ஒன்றில் நேற்றுச் சந்தேகத்துடன் நடமாடிய இரு நாகா பெண்கள் கைதுசெய்யப்பட்டார்களென்றும் அவர்களிடமிருந்து ஆட்சேபகரமான பத்திரங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

ஐஜாலுக்கு அருகே வண்டிக்கூட்டம் ஒன்றை தானியங்கி ஆயுதங்களால் மீஸோக்கள் தாக்கியதில் ஐவர் காயமடைந்தனர்.

---

## குமரா தோல்வி

திருவனந்தபுரம், மே 8

இங்கு நடைபெறும் கிழக்குப்பிராந்திய 'டேவிஸ்கப்' டென்னிஸ் போட்டிகளில் இந்தியாவைச் சேர்ந்த பிரேம்ஜித்லால், இலங்கையைச் சேர்ந்த பி. எஸ். குமராவை 6-2, 6-4, 6-4 புள்ளிகளால் தோற்கடித்தார்.

இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. எச். எஸ். அமரசிங்கா உட்படப் பல பிரபலஸ்தர்கள் 3 நாள் நடைபெறும் இப்போட்டிகளைக் கண்டுவருகிறார்கள்.

---

## பக்தவத்சலம்

சென்னை, மே 8

பொதுசேவைக் கமிஷன் பரீட்சையில் தமிழை உபயோகிப்பது பற்றி ஆலோசனை நடத்திவருவதாக தமிழக முதன்மந்திரி பக்தவத்சலம் அறிவித்தார்.

---

## ரொடீஷியப் பேச்சு

லண்டன், மே 8

ரொடீஷிய-பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கிடையே இன்று லண்டனில் பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன.

---

விஞ்ஞான உலகில் பிரச்னை

## சந்திரன் ஒன்றல்ல; பலவுண்டாம்

ஹாம்பர்க், மே 8

சந்திரன் பூமியிலிருந்து பிரிந்துசென்றதா அல்லது இயற்கையிலேயே தோன்றியதா? ஒன்ற விளுக்கள மீண்டும் கிளம்பியுள்ளன. சந்திரனின் 'இரகசியத்தை' அறிய, லூனு—10' என்ற வானவெளிக் கப்பலை ரஷ்யா ஏவியதைத் தொடர்ந்து மீண்டும் இந்த 'சர்ச்சை' தொடங்கியுள்ளது கடந்த காலத்தில் வதந்தியை அடிப்படையாகக் கொண்ட கதைகளே விஞ்ஞான உலகிலும் பரவியிருந்தது. ஆனல் சமீபத்தில்அமெரிக்க ரேஞ்சர்' செயற்கைக் கோளங்களும், ரஷ்யாவின் 'லூனு' வானவெளிக் கப்பலும், சந்திரனின் 'மர்ம'த்தை ஓரளவுக்கு அம்பலப்படுத்தியுள்ளன சந்திரமண்டல ஆராய்ச்சியில், ஐரோப்பாவின் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரென மதிக்கப்படும் பேராசிரியர் டாக்டர் ஹான்ஸ். ஹாப்னர் வெளியிட்டிருந்த பல கருத்துக்களையே இந்த வானவெளி ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. டாக்டர் ஹாப்னர், ஹாம்பர்க் வானவெளி ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றுகிறார்.

ரஷ்யாவின்' லூனு-9' வான வெளிக்கப்பல், சந்திரனின் மேற்பரப்புக்குறித்துபிரமிப்பூட்டும் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்புவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, 'சந்திரனின் மேற்பரப்புக் குறித்து' சில அரிய தகவல்களைப் பேராசிரியர்ஹாப்னர் வெளியிட்டிருந்தார். ஆனல் அப்போது அவரது கருத்தை யாரும் ஏற்கவில்லை. 'சந்திரனின் மேற்பரப்பு நுண்ணிய தூசிகளால் மூடப்பட்டிருக்கிறது' என்று அமெரிக்க, ரஷ்ய விஞ்ஞானிகள் கூறியதைத்தான் நம்பினர்கள். 'சந்திரனின் மேற்பரப்பு நுண் தூள்களையுடையது ஆனல் உறுதியானது' என்று பேராசிரியர் ஹாப்னர் உறுதி கூறியிருந்தார். 'லூனு-9 வானவெளிக்கப்பல் அனுப்பிய புகைப்படங்கள், ஹாப்னரின் கருத்தைத்தான் உறுதிசெய்தன.

பேராசிரியர் ஹாப்னர் வெளியிட்டுள்ள மற்ற கருத்துக்களும், சிந்தனைக்குரியவை.

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அனல்கக்கும் திரவவடிவ பூமியிலிருந்து பிரிந்துசென்றதுதான் சந்திரன் என்பது தவறு.

பல நூற்றுண்டுகளாகக் கவிஞர்களால் பாராட்டிப் பாடப்பெற்ற சந்திரன், இந்த முடிவிலாப் பிரபஞ்சத்தில் ஆரம்பமுதலே தனியாகவே சுற்றித்திரிந்து வந்திருக்கிறது.

தற்செயலாக சந்திரன், பூமியின் பாதைக்குக் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கவேண்டும், அது முதல் பூமியைச் சுற்றி வரவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.

சந்திரனின் மேற்பரப்பில் காணப்படும் வெடிப்புகள், பெரிய எரி நட்சத்திரங்கள் மோதியதால் ஏற்பட்டவை என்று இக்காரணத்தினலேயே கூறப்படுகின்றன. சந்திரனில் கன சென்டி மீட்டருக்கு 3 341 கிராம் அடர்த்தியும், பூமியில் கன சென்டி மீட்டருக்கு 5-314 கிராம் அடர்த்தியும் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே பூமியிலிருந்துசந்திரன் பிரியவில்லை என்பது தெளிவாகிறது

சந்திரனில் காணப்படும் வெடிப்புகள், பழைய எரிமலைகளின் சின்னங்களே என்று சில விஞ்ஞானிகள் கூறியது சரியென்றால் பூமியிலிருந்து முழுவதுமாகவோ பாகங்களாகவோ பிரிந்து சென்றிருக்கவேண்டுமென்ற கருத்தும் நியாயமாகப் படும். இதற்கு ஒரு விளக்கமும் தரப்படுகிறது. தற்போது பூமி சுழலும் வேகத்தைவிட அதிகவேகத்தில் சுற்றிக்கொண்டிருக்க வேண்டும். அந்தச் சுழல்வேகத்தின் காரணமாக பூமத்திய ரேகையில் புடைப்புகள் ஏற்பட்டு தனியாக பிய்த்துக்கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி தன்னைத் தானே சுற்ற 6.9 மணி நேரமே பிடித்திருக்கும் என்று ஜெர்மன் வானவெளி ஆராய்ச்சியாளர் ஹென்னிஸ் கெர்ஸ்டன்கார்ன், 'கணக்கு' போட்டு கூறியிருக்கிறார்.

இன்று பசிபிக் பெருங்கடல் இருக்குமிடத்தில் இருந்து தான் சந்திரன் 'பிய்த்துக்'கொண்டு சென்றிருக்கவேண்டும் என்று பான், ஹாம்பர்க் நகரங்களைச்சேர்ந்த புவியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். ஏனெனில் பூமியின் பரப்பில் களிமண், பாறை, என்று நாம் குறிப்பிடுவது போன்று "சியல்" எனப்படும் ஒருவித படிவம் காணப்படவில்லை. பொதுவாக இதைவிட கனமான படிவம் கடலின் படுகையில் தான் காணப்படுகிறது. "காணமற்போன" சியல் படிவத்தின் அடர்த்தி என்னவோ, அதே அளவுக்குத் தான் சந்திரனின் மேற்பரப்பு அடர்த்தியும் இருக்கிறது.

சந்திரனில் சமீபத்தில் காணப்பட்ட மர்மமான சிவப்பு புள்ளிகள், எரிமலைகளின் குமுறலின் அறிகுறிகளாகுமென விஞ்ஞானிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

---

ரஷ்யாவில்

## தாகூர் நூல்களின் இரண்டாம் வெளியீடு

மாஸ்கோ, மே 8

கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் 12 நூல் தொகுதிகளில், கடைசித் தொகுதி ரஷ்யாவில் வெளியிடப்பட்டிருக்கிறது 92.000க்கு மேற்பட்ட பிரதிகள் இதில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

தாகூரின் 12 தொகுதிகளும் இப்போது இரண்டாவது தடவையாக வெளியிடப்படுகிறது. 10 ஆண்டுகளுக்கு முன் அவரது 8 தொகுதிகள் ரஷ்யாவில் பிரசுரிக்கப்பட்டன

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இலட்சிய நடிகர் திரு. எஸ். ராஜேந்திரனும் அவரது மனைவி நடிகை விஜயகுமாரியும் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தபொழுது "ஈழநாடு" நிருபருக்கு அளித்த பேட்டியின்போது எடுக்கப்பட்ட படம்.

# 'ஜனநாயகத்தில் இன்னும் நாம் அனுபவமற்றவர்கள்'

மாவிட்டபுரம், ஞாயிறு

"நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாதுபொருளாதாரத்துறையில் தீவிர முன்னேற்றம் காண முயற்சிகள் மேற்கொள்ளாமல் ஆட்சியைக் கைப்பற்றுதலேயே முக்கிய நோக்காகஇலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் காண்டிருக்குமானால் மக்கள் மாற்று அரசியலை நாடும் காலம் வரலாம்" என்று இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. க. அருமைநாயகம் வீமன்காமம் இளைஞர்சங்கம், சனசமூகநிலைய 22-ம் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வீமன்காமம் இளைஞர் சங்க முன்றிலில் நடைபெற்ற ஆண்டு விழாவுக்கு திரு. சி. இராசரத்தினம் தலைமைவகித்தார். திரு. அருமைநாயகம் 'சுதந்திர இலங்கையின் அரசியல்நிலை' என்ற பொருள்பற்றிப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"நாம் இன்றுசெயற்படுத்திக்கொண்டிருக்கும்பாராளுமன்ற ஜனநாயக அரசியல முறையில் போதியஅனுபவமில்லை. ஒரு நாட்டின் வரலாற்றில் 18 வருட காலம் குறிப்பிடக்கூடிய கால அளவுப்பகுதியல்ல. இதற்குள் இம்முறை நல்ல முறையில் செயற்படுமென எதிர்பார்ப்பது தவறு. நாம் பின்பற்றும் பாராளுமன்ற ஜனநாயகமுறை ஆங்கில அரசியல்முறையைப் பின்பற்றியுள்ளது, ஆனால் ஆங்கிலநாட்டில் இந்த அரசியல்முறை பல நூற்றாண்டின் அனுபவங்களாக வளர்ச்சியடைந்தது. ஒருமரமாக அது இயங்கிவருகிறது. ஆனால்நமது நாட்டில் இன்னும் போதிய அளவு வளர்ச்சியடையவில்லை.

இன, மத, மொழி ரீதியில் எழுப்பப்படும் கிளர்ச்சிகள் நாட்டின் நலனை உத்தேசித்துச் செய்யப்பட்டதல்ல. குறுகிய சுயநல நோக்கத்தைக் கொண்டவை.

இலங்கை அரசியலை அச்சுறுத்தும் இன்னொரு காரணம் போலித் தேசியவாதமாகும் உண்மையில்வெளிநாட்டாருடைய ஆட்சிக் காலத்தில் தோன்றியிருக்க வேண்டிய இத்தேசிய உணர்ச்சி நாம்சுதந்திரம்பெற்ற பின்னரே பெரும்பான்மை மக்களிடையே பரவியுள்ளது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் மக்களிடையே அரசியல் வாதிகளினால் கிளப்பிவிடப்பட்ட இவ்வுணர்ச்சி நாட்டை பலவீனப்படுத்துகிறது. நம்மை நாம் ஆட்சிசெய்ய ஆரம்பித்த பின்னர் எதன்பொருட்டு நமது மொழிக்கும் மதத்திற்கும் கூட்டரீதியாக அங்கீகாரம் அளிக்கவேண்டும். இது நம்மில் நமக்கே நம்பிக்கையில்லை என்பதனைத் தெரிவிக்கிறது.

—

## மின்சாரம் கிடைக்கும்

### கரைச்சி கி. சங்க தலைவர் உறுதி

வவனியா, ஞாயிறு

"விவசாயத்திற்கு மின்சாரத்தைஉபயோகித்துபெரும் ஊதிபத்தை விவசாயிகள் அடையமுடியும். ஆகவே கல்மடு, வட்டக்கச்சி போன்ற பிரதேசத்திற்கு மின்சாரத்தை அமைத்து உதவ எமது கிராமசபை தயங்காது. சந்திர மண்டலத்தை மக்கள் அடையும் இக்காலத்தில் பட்டையாலும் வாளியாலும் நீர் இறைப்பது வெட்கக்கேடாகும்" இவ்வாறு கரைச்சி கிராமச்சங்கத் தலைவர் திரு. வீ ஆனந்தசங்கரி வட்டக்கச்சியில் மூன்றுவது இலவச ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

குடியேற்ற ஆதிபர் திரு. எஸ். மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்தஇலவச வைத்தியசாலைக்கு பொறுப்பாளராக கரைச்சி கிராமசபையால் நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் மூர்த்திக்குப்பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

## 10லட்சம் மாணவர்கள் கலந்துகொள்வர்

கொழும்பு திங்கள்

சிறுபோக நெற்சாகுபடி நிலங்களில் களை பிடுங்கும் திட்டம் இன்று ஆரம்பமாகின்றது. இந்த திட்டத்தில் சுமார் 10லட்சம் பள்ளி மாணவர்கள் கலந்து கொள்வார்கள்.

கொழும்பிலும் மாரட்டுவையிலுமுள்ள சுமார் 53 பாடசாலைகளைச் சேர்ந்த பள்ளிமாணவர்கள் பிளியாந்தலையில் களை பிடுங்கும் வேலையில் ஈடுபடுவார்கள். இந்த திட்டத்தின்படி பள்ளி மாணவர்கள் 5 நாட்களுக்கு விவசாயத்துறையில் உதவி புரிவார்கள்.

—

## ஞாபகார்த்தம்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

"சிரமதானமூலம் இளைஞர் ஈடிணையற்ற சேவையைச் செய்யலாம் என்பதில் நம்மைவிட்டுப் பிரிந்தகமலநாதன் மற்றைய வாலிபர்களுக்கும் வழிகாட்டினார்" என்று சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம், சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச்சங்கம் ஆகிய நிறுவனங்களின் ஆதரவில் கூட்டாக நடைபெற்ற 'கமலநாதன் ஞபகார்த்த விழா'வில் வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி பேசுகையில் கூறினார்.

இவ்வைபவத்திற்கு டாக்டர் ஜி. செல்லத்துரை தலைமைதாங்கினார்.

—

## பஹாய் இயக்க பிரதிநிதிகள் விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகிலஇலங்கை பஹாய் இயக்க தேசியசபையைச் சேர்ந்தவரும், பேர்சியா நாட்டைச்சேர்ந்தவருமான திருமதி பாஸி மிகிருன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி ட்றூமன், மலேசியாவைச் சேர்ந்த திரு. ஹொங் சுன் ஆகியோர் யாழ்ப்பாணப் பகுதிக்கு ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. சிவப்பிரகாசம் இவர்களை வரவேற்று உரையாற்றினார். யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில், சுன்ஞகம், சித்தங்கேணி, சுழிபுரம், சங்கானை, உடும்பராய், பருத்தித்துறை, நெல்லியடி, வதிரி, கரவெட்டி, துன்னலை, மண்டைதீவு ஆகிய பகுதிகளுக்கும் விஜயம்செய்து பஹாய் இயக்கப்பிரதிநிதிகளுடன் விரிவான பிரசாரங்களை நடாத்துவர்.

—

## 3000 கிராமங்கள் வரட்சிப் பிரதேசம்

பங்களூர், மே 8

மைசூரில் 3000 கிராமங்களில் வரட்சி ஏற்பட்டிருப்பதாயும், இவற்றில் 1800 [illegible] பட்டிருப்பதாயும் கூறப்பட்டது.

## ராணுவ வாகனங்கள் பற்றி விசாரணை

கொழும்பு, ஞாயிறு

ராணுவத்தினர் உபயோகிக்கும் வாகனங்கள் 1965 ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டரசாங்கத்தினரால் அரசியல் தேவைகளுக்காக உபயோகிக்கப்பட்டனவா என்பதை தற்பொழுது பாதுகாப்பு வெளிநாட்டமைச்சின் நிரந்தரக் காரியதரிசி விசாரணை செய்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை விரைவில் பிரதம மந்திரிக்குச் சமர்ப்பிக்கப்படும்.

—

## அல்ஜீரியாவுக்கு 'மிக்' விமானங்கள்

அல்ஜீயர்ஸ், மே 8

அல்ஜிரியாவுக்கு மேலும் மிக் ஜெட் விமானங்களையும் இதர நவீன ஆயுதங்களையும் ரஷ்யா வழங்கியிருக்கிறது. ஆபிரிக்காவில் எகிப்துக்கு அடுத்தபடியாக அதிக ராணுவ பலததை இப்போது அல்ஜீர்யா கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது

இதற்கிடையில் அல்ஜீரியாவிலுள்ள சகல வெளிநாட்டு எண்ணெய்க்கம்பனிகளையும் தேசியமயமாக்கப் போவதாய் பிரதமர் பொமிதியான் கூறினர்.

—

## அயூப்-நீவின் பேச்சு

ராவல்பிண்டி, மே 8

பர்மியஅதிபர் நீவின்னும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் இன்று தங்கள் பேச்சுக்களை ஆரம்பித்தனர். நாளை பர்மா-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தமொன்றில் அவர்கள் கைச்சாத்திடுவார்கள்.

—

## துங்கு ரஹ்மான் நிராகரித்தார்

கோலாலம்பூர், மே 8

சரவாக்கிலும், சபாவிலும் மக்களின் கருத்தை அறிய புதிய தேர்தல்கள் நடத்தப்படவேண்டுமென்ற இந்தோனேஷியாவின் கோரிக்கையை மலேஸியப் பிரதமர் துங்குரஹ்மான் நிராகரித்தார்.

## வாலிப முன்னணி கூட்டம்

பருத்தித்துறை, ஞாயிறு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பருத்தித்துறை வாலிப முன்னணியின் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது புது உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: திரு ஜி ஜி. பொன்னம்பலம், தலைவர்: திரு. பெ சுந்தரலிங்கம், காரியதரிசி: திரு. எஸ். கிருஷ்ணராசா, உப-காரியதரிசி: திரு. எம். இரத்தின சோதி, தனதிகாரி: திரு. வி. நாகநாதன்.

—

## நடிகர்களுக்கு தேநீர் விருந்து

பருத்தித்துறை. ஞாயிறு

அண்மையில் இங்கு விஜயம் செய்த இலட்சிய நடிகர் திரு. எஸ் எஸ். இராஜேந்திரன், ஆர். விஜயகுமாரி ஆகியோருக்கு பருத்தித்துறை நகரசபையின் தலைவர் திரு. ந. நடராசா தேநீர் விருந்தொன்றளித்துக் கௌரவித்தார்.

—

## இரட்டைத்தட்டு பஸ் சேவையில் ஈடுபடாது

பருத்தித்துறை, ஞாயிறு

இ. போ. ச. பருத்தித்துறை டிப்போவுக்கு இரட்டைத்தட்டு பஸ்கள் அனுப்பி வைக்கப்பட மாட்டாதெனவும் அதற்குப் பதிலாக புதியபஸ்களே வந்துசேரும் எனவும் தெரியவருகிறது.

—

## பாகிஸ்தானில் எதிர்ப்பு தினம்

ராவல்பிண்டி, மே 8

ஷேக் அப்துல்லாவையும், இதர காஷ்மீர் தலைவர்களையும் இந்தியா காவலில் வைத்திருப்பதை எதிர்ப்பு தினமாகபாகிஸ்தான் இன்று அனுஷ்டிக்கிறது.

யிவாக்கெடுப்பு முன்னணியின் தற்காலிக தலைவர் ஷேக்அப்துல்ஹமீத் நேற்று இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாய் இங்கு கூறப்பட்டது.

கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

# அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

கிடைக்குமிடம்:

## சுந்தரம் பிறதர்ஸ்

(மருந்துச்சரக்கு வியாபாரம்)

73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்

## தேசியப்பற்று உடையவராயிருங்கள்

நாட்டின் பணத்தை சேமிக்கவும்—குடும்ப ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும்

# குண்டசாலை அரிசியை

சாப்பிடுங்கள்.

* 100 வீதம் மண், கல் இல்லாதது.
* 100 வீதம் துர் நாற்றமற்றது.
* சத்துள்ளதும் போஷாக்கு மிகுந்ததும்.
* சுவையான அவித்த புளுங்கல் அரிசி.

குண்டசாலை அரிசியை நீங்கள் வாங்கிச் சமைத்தால் 20 வீதம் கூடுதலான அளவை பெறுவீர்கள்.

ஏனென்றல் அது மூன்று மணித்தியாலம் மட்டும் அனலில் அவிய வைத்தது, குறுணி இல்லாதது.

இன்று குண்டசாலை அரிசியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். பின்னர் தினமும் அதையே வாங்குவீர்கள்.

கொழும்பு விநியோகஸ்தர்:

சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி
181, பழைய சோனக தெரு, கொழும்பு—12
தொலைபேசி: 4912

புறக்கோட்டை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கண்டி விநியோகஸ்தர்:

ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், — கண்டி.
கண்டி சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள்:

ஜெனரல் புறடக்ட்ஸ் உற்பத்தி ஆலை
குண்டசாலை, குருதேனியா.
தொலைபேசி: 308

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்


பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.

## முகாமையாளர் நியமனம்

இச்சங்கத்தின் நிரந்தர சேவைக்கென ஓர் முகாமையாளர் தேவை. பின்வரும் தகுதியுடையோர் 20-5-66க்கு முன் விண்ணப்பிக்குக.

(அ) வயது 25 க்கும் 40 க்கும் இடைப்பட்டோர்.
(ஆ) கல்வித்தராதரம்:-
1 வர்த்தக இயலிலும் கணக்கியலிலும் சித்தியெய்திய பட்டதாரிகள் அல்லது
2 ஜீ சி. ஈ. உயர்தர வகுப்பில் G. C. E, Adv. Level) பொருளாதாரம், வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தியெய்திய ஆங்கிலத்தில் விசேட தேர்ச்சியுடையவர்கள்.
(இ) விசேட தகைமைகள் நிர்வாக அனுபவம் தட்டச்சு வேலையில் விசேட பயிற்சி ஆதியன.
(ஈ) நற்சான்றுப் பத்திரம்:- மிக அண்மையில் பெற்ற இரு நற்சான்றுப் பத்திரங்கள்.
(உ) பிணை:- ரொக்கம் ரூபா 1500/-
ஆதனப்பிணை ரூபா 5000/-
(ஊ) சம்பள விகிதம்: எல்லா வகைகளும் சேர

வருட வீதம் ரூபா 3000/- — 4800/- / 120 x 6 x 180 x 6

அனுபவத்திற்கேற்ப கூடியபடியிலும் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இ. கந்தையா
கௌரவ காரியதரிசி

நெடுந்தீவு, 6-5-66



## மருத்துவ தாதி

மாநகரசபை யாழ்ப்பாணம்

1. மேற் குறிக்கப்பட்டபதவிக்கு யாழ். மாநகரசபை கமிஷனரினல் மனுக்கள் கோரப்படுகின்றன.
2. சம்பளம்: இப்பதவிக்கு உரிய சம்பளம் ரூபா 672-18×18 - ரூபா 996 வருட மொன்றிற்கு.
3. தேவையான தகைமைகள்.
(a) வயது, 1-6-66-ல் மனுதாரர்கள் 40 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
(b) தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சிரேஷ்ட தராதரப்பத்திரம் சித்தியெய்தியவராகவும் தமிழில் சரளமாகப் பேசவும் திறமையாக எழுதவும் தகுதியிள்ளவராய் இருத்தல்வேண்டும்.
(c) மனுதாரர்கள் பதிவு செய்யப்பட்ட மருத்துவ தாதிகளாயும் சுகாதார அதிகாரியிடமிருந்து சான்றிதழ்ப்பத்திரம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும். சுகாதார வேலை சம்பந்தப்பட்டவேலையில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்களுக்கு முதன்மை கொடுக்கப்படும்.
4. அண்மையில் பெறப்பட்ட இரண்டுக்கு மேற்படாத நற்சாட்சிப் பத்திரங்கள் மனுதாரர்கள் தங்கள் மனுக்களுடன் அனுப்புதல்வேண்டும். வயதுசம்பந்தமாக பிறப்புப் பத்திரத்தின் பிரதி யொன்றும் அனுப்புதல் வேண்டும்.
மூன்றுவது பந்தியில் C பிரிவில் தெரிவிக்கப்பட்ட தற்கேற்ப மருத்துவத் துறையில் தகுதிவாய்ந்த ஒருவரின் நற்சாட்சிப்பத்திரமும் இணைக்கப்பட வேண்டும்.
5. மனுக்கள் யாழ்ப்பாணம் மாநகரசபைகமிஷனருக்கு விலாசமிட்டு மே 21-ந்திகதி 1966-ம் ஆண்டிற்குப்பிந்தாது அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப்பின்னர்கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஹட்சன் செல்வராசா
மாநகரசபை கமிஷனர்
யாழ்ப்பாணம்.
மாநகரசபைமண்டபம்,
யாழ்ப்பாணம்.
7-5-66. 402


## மணிலா உதைபந்தாட்டம்

மணிலா, மே 8

இங்கு நடைபெறும் 8வது ஆசிய யுவர் உதைபந்தாட்டத்தில் 'குவாட்டர்பைனலில்' விளையாட இந்திய தகுதிபெற்றிருக்கிறது.

நேற்று சிங்கப்பூரை 4-1 கோல்களால் அது தோற்கடித்தது.

## செக்கோஸ்.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் தேசிய திட்டங்கள் வகுக்கப்பட்டன.

1960-ம் ஆண்டு புதிய அரசியல் திட்டமொன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் மேலதிக கவனம் செலுத்தப்பட்டது, 1 கோடி 40 லட்சம் ஜனத்தொகையைக் கொண்ட செக்கோஸ்லவேக்கிய நாட்டில் 41 சர்வ கலாசாலைகள் இருக்கின்றன. பௌதிகம், இரசாயனம், விண்வெளி ஆராய்ச்சி, போக்குவரத்து, விவசாயம், பொறியியல், நெசவு, இசை, கலைத்துறை ஆகிய பாடங்கள் செக். நாட்டு சர்வகலாசாலைகளில் கற்பிக்கப்பகின்றன. 4 ஆயிரத்துக்கு அதிகமான வெளிநாட்டுமாணவர்களும் செக், பல்கலைக்கழகங்களில் பயின்று வருகின்றனர். 15 வயது வரையிலும் குழந்தைகளுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வி அளிக்கப்படுகிறது.

செக். நாட்டின் பெண்களில் 44.6 விகிதமானேர் தொழிலாளர்கள். இதனல் அவர்களின் குழந்தைகளைப் பாதுகாத்து வைக்கவும். தொழில்விஷயங்களை அவர்கள் தெரிந்துகொள்ளவும் கூடிய முறையில் பல சிசு பராமரிப்பு பாடசாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. செக்கோஸ்லவேக்கியா காலனி நாடுகளின் விடுதலைக்காகவும், அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் தன்னலான உதவிகள் அனைத்தையும் நல்கி வருகிறது. எந்தவொரு சுதந்திர ஆதிபத்திய நாட்டினதும் உள்விவகாரங்களில் செக். நாடு தலையிடுவதில்லை, ஐ. நாவின் கோட்பாடுகளுக்கமைய சகல நாடுகளுடனும் சமத்துவ உறவை செக்கோஸ்லவேக்கியா நிலைநாட்டி வருகிறது.

செக்கோஸ்லவேக்கியா, ஆசிய, ஆபிரிக்க - லத்தீன் - அமெரிக்க நாடுகளுக்கு உயர்ந்தரக இயந்திரங்களை தனது உதவித் திட்டங்களின்கீழ் நல்கியுள்ளது. இந்நாடுகளிலிருந்து பருத்தி, ரப்பர், கம்பளி ஆகியமூலப் பொருட்களை செக். நாடு இறக்குமதி செய்துகொள்கிறது.

பருத்தித்துறை

## பருத்தித்துறை பஸ் நிலையம் விரைவான நடவடிக்கை

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை பஸ்நிலையத்தின் இடநெருக்கடி காரணமாக பருத்தித்துறை நகரசபைஅவ்விடத்தைவிஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் பிறிதோரிடத்திற்கு பஸ்நிலையம் மாற்றப்படலாமெனத் தெரியவருகிறது.

அண்மையில் இங்கு விஜயஞ்செய்ய தேசிய சேவை உதவியமைச்சரிடம் பருத்தித்துறை, உடுப்பிட்டி எம். பிக்கள் இதுவிஷயமாக பஸ் நிலையத்தைக் காண்பித்து விஸ்தரிப்பு, அல்லது இடமாற்றம் அவசியம் என்வற்புறுத்தியதன் பேரில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

## சோல்பரிபிரபு ஆஸ்பத்திரியில் அனுமதி

லண்டன், மே8

முன்னள் இலங்கை கவர்னர்ஜெனரல் சோல்பரிபிரபு சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது குணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சோல்பரிபிரபுவுக்கு தற்போது வயது 79.

## இலங்கையும் பங்குபற்றும்

பாங்காக், மே 8

ஆசிய கல்வி அபிவிருத்திக்கு டெலிவிஷன் பயன்படுத்துவது பற்றி ஆராய, வருகிற 16-ம் திகதி முதல்23-ம் திகதிவரை இங்கே நடைபெறவிருக்கும் மகாநாட்டில் இலங்கையும் பங்குபற்றும். இலங்கைதவிர இதர 20 நாடுகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்கிறார்கள். ஐ. நா கல்வி, சமூக கலாச்சார ஸ்தாபனத்தின் ஆதரவின்கீழ் இதுநடைபெறுகிறது.

## சந்திரன் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பலர்கருதுகிருர்கள் எனவே சந்திரன் 'உயிரற்றகோளம்' அல்ல என்று பேராசிரியர் அல்படோவ் நம்புகிருர். அங்கு உயிரினங்கள் வாழக்கூடும். சந்திரன் மட்டுமின்றி மேலும் பல இயற்கையான கோணங்கள் (குட்டிச் சந்திரன்கள்) பூமியை வலம் வருகின்றன என்று தெரியவந்திருக்கிறது. சந்திரன் உருவானபோது ஒதுக்கப்பட்ட காஸ்மிருக்குப்பைகளின் குவியல்களே இவ்வித 'குட்டிச் சந்திரன்களாக' உருமாறியிருக்கவேண்டும்.

சந்திரனைப்பற்றி இவ்விதம் பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. இதற்கு "மனிதன் சந்திரனில் போய்ச்சேர்ந்ததும் எல்லா விதசர்ச்சைகளுக்கும் முடிவு ஏற்படும்" என்கிருர் பேராசிரியர் டாக்டர் ஹாப்னர்.

யூ. பி, எஸ்.


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஆனந்தன் - சந்திரகாந்தா
நடித்த
நானும் மனிதன்தான்



ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30, 6-30, 9-45க்கு
பி. யு. சின்னப்பா
நடித்த
ஆரியமாலா



REGAL—JAFFNA
NOW SHOWING!
Sophia Loren - George Peppard
in
Operation Cross Bow


# வரி விளம்பரம்


### தேவை

நெசவாளர்

நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மலர் நெசவு நிலையத்திற்கு நன்கு நெசவு பயின்ற பெண்கள் தேவை. நேரில் வரவும். மனேஜர், மைலன்ஸ் மேல் மாடி, 119, கே, கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், 318

நெசவாளர்

பொன்னலையிலுள்ள நெசவு நிலையத்துக்கு பயிற்சி பெற்ற நெசவாளர்தேவை. 60s, 80s தனி நூலிலும், பட்டு நூலிலும் வேலைசெய்யக்கூடியவர்களுக்கு விசேட சலுகை உண்டு. உடனே விண்ணப்பிக்கவும். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 321

பங்காளி அல்லது மனேஜர்

கொழும்பிலுள்ள பல சரக்கு வியாபாரத்துக்குப் பணமுதலீடு செய்யக்கூடிய பங்காளி அல்லது மனேச்சர் தேவை. மாதாந்தம் ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஆதாயம் கிடைக்கக்கூடியது. மனுச்செய்க. செல்லத்துரை, 271, நாவலர்வீதி, (ஆனைப்பந்தி) யாழ்ப்பாணம். 308

### வாடகைக்கு

வீடு

சுதுமலையில், மானிப்பாய்-தாவடி வீதியில் "பசுபதாபதி இல்லம்" சகல வசதிகளுடன் கூடிய பெரிய மாடி வீடு நீண்டகால வாடகைக்கு உண்டு. கைத்தறி நெசவு அல்லது 'டியூடரி' (Tutory) போன்ற ஸ்தாபனங்களை நடத்துவதற்கு வசதியானது. இம்மாதம் இருபதாம்திகதிக்குள் நேரில் சந்திக்கவும்- திருமதி ப. பூமனி 312

### விற்பனைக்கு

காணி

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற்கந்தோர், வவனியா. 291

வீடு

ஆறுபரப்பு 3 அறை மத்திய வீடு விற்பனைக்குண்டு. மின்சார வசதி கிணறு, உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்ரூபா30000/. திருமதி K. B இராசரத்தினம் 'தயாளன்' உடுவில். 309

ஒலிபெருக்கி

கிறம்பியன், வாட்டெக்ஸன் ஒலிபெருக்கி செற் விற்பனைக்குண்டு. பவானி சவுண்ட் சேவிஸ், கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி. 320

### கல்வி

பிரவேச பாலபண்டித வகுப்புகள்

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்க ஆதரவில் பண்ணுகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் 11-5-66 புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு சைவகுப்புகள் தொடக்கப்பட்டு, ஒவ்வொரு போயாதினத்திலும் அதற்கு முன் தினத்திலும் ஏனைய விடுமுறைநாட்களிலும் நடைபெறும். இவற்றிற் சேர்ந்து கற்கவிரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். பண்டிதர் அ, ஆறுமுகம், பண்ணுகம், சுழிபுரம். 317



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு படகுசேவை
# மக்கள் கஷ்டம் பற்றி மீண்டும் புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறையிலிருந்து நெடுந்தீவுக்கு செல்லும் பிரயாணிகள் நெடுந்தீவு துறைமுகத்தில் இடுப்பளவு தண்ணீரில் இறங்கி நடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், போதிய நீர் இல்லாததால் அவர்களை ஏற்றிச்செல்லும் 'இராஜேஸ்வரி' என்ற படகு ஆற்றுக்கட்டையிலேயே நின்று விடுவதாகவும் புகார் செய்யப்படுகிறது.

கொந்தளிக்கும் கடலில் கடும் வெயிலினாலும், தலைச் சுற்றினாலும் வாந்தியினாலும் அவதிப்படும் பிரயாணிகள் இவ்வித நிலையில் உடலும் உடையும் நனைய கடலில் இறங்கி நடந்துவருவது பெரும் சிரமத்தை உண்டாக்குவதாக மேலும் கூறப்படுகிறது.

துறைமுகத்துக்குச் செல்லும் கால்வாயில் போதிய நீர் இல்லாமலிப்பதால் ஆண்டுதோறும் இதுபொது மராமத்து இலாகாவினால் தோண்டப்படுவது வழக்கம் என்றும் ஆனால் கடந்த சில வருடங்களாக வழமைபோல் அது ஆழமாக்கப்படாததின் காரணமாகவே இந்த நிலை ஏறபட்டிருக்கிறதென்றும் தெரிகிறது. இதன்காரணமாக கால்வாய் நாளுக்கு நாள் சேற்றினால் மூடப்பட்டுவருகிறது.

ஊர்காவற்றுறை நெடுந்தீவு படகுசேவையின்மோசமான நிலை ஒரு புறமிருக்க தீவில் சென்றஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பஸ்சேவையும் மோசமான நிலையில் இருக்கிறது. தீவுக்குள் ஒரு பஸ் மட்டும்தான் சேவைசெய்து வருகிறது. பழைய பஸ் வண்டியான இது அடிக்கடி பழுதடைந்து வருவதால் பிரயாணிகள் பாதிக்கப்பட்டுவருகிறார்கள்.

நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்து சம்பந்தமாக பலகாலமாக மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தும் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதது குறித்து அவ்வூர் மக்கள் அதிருப்தியடைந்திருப்பதாய்க் கூறப்படுகிறது

## இந்தியாவில் மாலை மீனவர்

ஆலப்புழை, மே 8

கடந்த ஏப்ரல் 23-ம் திகதி மீன் பிடிப்பதற்காக மாலைதீவிலிருந்து புறப்பட்ட 4 மீன்பிடிகாரர்கள் ஆலப்புழை கரையில்வந்து ஒதுங்கினர். 5 நாட்கள் கடலில் தத்தளித்தபின் ஒதுங்கிய இந்த மீனவர்களையும் அவர்களது படகையும் இந்தியப் பொலிசார் பாதுகாப்பில்வைத்தனர். இப்போது அவர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பி. டி. ஐ.

## "மிரட்டலுக்கு அஞ்சோம்"

நாகபுரி, மே 8

''எல்லைக்கப்பாலிருந்து வரும் மிரட்டல்கள் பாரத மக்களைப் பணியவவைக்க முடியாது'' என பிரதமர் இந்திராகாந்தி இங்கு நடைபெற்ற பெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

## தமிழில்திறைசேரி சுற்றறிக்கைகள்

யாழ்ப்பாணம், திங்.

திறைசேரி சுற்றறிக்கைகள் தற்பொழுது தமிழிலும் திணைக்கள அதிபர்களுக்கும், நிரந்தரக்காரியதரிசிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் என்ஜினியர்களின் சம்பளம் சம்பந்தமான திறைசேரிச் சுற்றறிக்கை சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் பிரசுரிக்கப்பட்டு எல்லாத் திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ்மொழி மசோதா நிறைவேற்றப்பட்டபின்னர் தமிழில் முதலில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இதுவெனத் தெரியவருகின்றது.

இதற்கு முன்னர் சுற்றுநிருபங்கள் யாவும் சிங்களத்திலேயே திறைசேரிப் பகுதியினரால் அனுப்பப்பட்டுவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் காலரா தடுப்பு நடவடிக்கை தீவிரம்

மன்னார், ஞாயிறு

மன்னாரில் இன்னும் ஒருவருக்கு காலரா தொற்றியிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதால்காலரா தடைமருந்தை மக்கள் தாங்களாகவே சௌக்கியபகுதிக்கு சென்று ஏற்றிக்கொள்கின்றனர் அதனால் பஸ்களில் செல்லும் பிரயாணிகளுக்கு உடனுக்குடனே மன்னார் பஸ் ஸ்டாண்டில் வைத்து ஊசிபோட்டு அனுப்புகின்றனர். இதற்காக வெளியிடங்களிலிருந்தும் வைத்திய அதிகாரிகள் மன்னாருக்கு அழைக்கப்பட்டுள்ளனர்

## மாஸேதுங் விலகினரா?

டோக்கியோ, மே 8

சீனத்தலைவர் மாஸேதுங் ஏற்கனவே அந்நாட்டு அரசியல் அரங்கிலிருந்து விலகிவிட்டதாய்டோக்கியோவில் வதந்திகள் பரவியுள்ளன.

திரு. மாவுக்கு இப்போது சீனாவில் அடையாள பூர்வமான அந்தஸ்தே இருக்கிறது என அந்த வதந்திகள் மேலும் கூறின.

சென்ற ஆண்டு துவக்கத்திலிருந்தே சீனாவில் செய்யப்பட்ட பிரதான அரசியல் முடிவுகளில் திரு. மாவுக்கு பங்கு இல்லை என்றும் வதந்திகள் தொடர்ந்து கூறப்படுகின்றன.

### எதிரி குற்ற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பளித்தார்.

1964-ம் வருடம் யூன் மாதம் 4-ந் திகதி கோப்பாயைச்சேர்ந்த இருபாலையில் சின்னவி என்பவர்தமது ஒன்றரைவயது மகள் பரமேஸ்வரியைக் கத்தியால் வெட்டிக் கொலைசெய்ததாக இவ் வழக்கு தொடரப்பட்டது.

எதிரியின் மகளும் இறந்தவரின் சகோதரியுமானநல்லதம்பியின் மனைவியான தவம் (வயது 17) என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எதிரி எனது தந்தை. காலஞ்சென்றவர் எனது சகோதரி. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் அடுப்படியில் சத்தங்கேட்டு அங்கு சென்று பார்த்தபோது எனது தந்தைஎனது சகோதரியான பரமேஸ்வரியின் கழுத்தில் வெட்டிவிட்டு சென்றுகொண்டிருந்தார். நான் வெளியில் ஓடிச் சென்று கணபதி செல்லனிடம் நடைபெற்றதைக் கூறினேன்'.

தமதுதந்தை இரண்டு மூன்றுவருடகாலம் சித்தசுவாதீனமற்ற நிலையில் இருந்தாரென்றும் கத்தியையும் தடியையும் கொண்டு திரிவது வழக்கமென்றும் தம்மையும் துரத்துவது வழக்கமென்றும் தவம் தமது சாட்சியத்தின்போது தெரிவித்தார்,

எதிரியின் மனைவி செல்லம்மா, அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் செனிவரத்தின ஆகியோரும்சாட்சியமளித்தனர்,

எதிரிசார்பில் அட்வக்கேட் திரு கே வி எஸ் சண்முகநாதன் [illegible] நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அட்வக்கேட் திரு ஆர் ஆர் தங்கராஜா நியமிக்கப்பட்டுள்ளார். முடிகுரிய தரப்பில் திரு சில்வா ஆஜரானார்.

வடபகுதி அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் [illegible]-ந் திகதி காலை ஆரம்பமாகும்

தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பட்டு நெசவு தொழிற்சாலைக்கு நெசவுத் தொழிலில் அனுபவம் வாய்ந்த பெண்கள்தேவை.

இரண்டு வருடத்திற்கு அதிகமான அனுபவம் பெற்றவர்களே கீழ் கண்ட விலாசத்திற்கு 20-5-66ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்

சாறிஎம்போறியம்

124'காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

401

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது'

புதிய கல்வி மசோதா

## மந்திரிக்கு விரிவான அதிகாரங்கள்

கொழும்பு, ஞாயிறு

உயர் தரக்கல்வி சம்பந்தமாக கடந்த வெள்ளிக்கிழமை அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்ட மசோதாவில் கல்வி மந்திரிக்கு உயர்தரக் கல்வி அமைப்பு குறித்து விரிவான அதிகாரங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளன.

இந்த மசோதாவின்படி உயர்தரக் கல்வி சம்பந்தமாக தேசியசபையொன்று நிறுவப்படும். உயர்தரக் கல்வி நிலையங்களில் கல்வி தராதரத்தை நிர்ணயிப்பதும், அவைகளை நிர்வகிப்பதும் இச்சேவையின் முக்கிய கடமைகளாகவிருக்கும். இந்தசபை ஒரு தலைவரையும் எட்டு அங்கத்தவர்களையும் கொண்டதாக விளங்கும். இவர்களை கல்வி மந்திரியே நியமிப்பார். இந்த சபை செய்யும் எந்த முடிவுகளும் மந்திரியின் அங்கீகாரத்துக்குப்பிறகுதான் அமுலுக்கு வரும். மந்திரி அவசியமான போதெல்லாம் இச்சபைக்கு உத்தரவுகள் பிறப்பிப்பார். அவைகளைச் செயல் படுத்த இச்சபை கடமைப்பட்டிருக்கும்.

### தேசிய சபை

கல்வி மந்திரி தயாரித்துள்ள புதிய மசோதாவின்படி உயர் தரக்கல்விஅமைப்பை உயர்தரக் கல்வி தேசிய சபை கட்டுப்படுத்துவதாக இருக்கும்

### பல்கலைக் கழகங்கள்

புதிதாகப் பல்கலைக் கழகங்கள் நிறுவுவதற்கான வசதிகளும் இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ளன. மந்திரி விடுக்கும் கட்டளைப் பிரமாணங்களுக்கமைய நாட்டின் உயர்தரக் கல்வியை வளர்த்து அபிவிருத்தி செய்வதுஇப்பல்கலைக் கழகங்களின் குறிக்கோளாகவிருக்கும்.

பல்கலைக் கழகங்களின், குறிக்கோள், பெயர், அமைப்பு, அவை அமைவதற்கான இடம் ஆகியவை குறித்து மந்திரி அவ்வப்போது கட்டளைகள் பிறப்பிப்பார்.

## யாழ்ப்பாணம் நூதனசாலை

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள நூதனசாலையை அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள்குறித்து தமிழரசுக்கட்சி கண்டனம் தெரிவித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் நூதனசாலையை இன்னும் அபிவிருத்தி செய்து கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் உள்ளவைகளின் தரத்துக்குஉயர்த்தவேண்டுமென்றும் தமிழரசுக்கட்சி அபிப்பிராயம்தெரிவித்துள்ளது.

## இன்று நியமனப்பத்திரம் தாக்கல்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 12-ம் வட்டார இடைத் தேர்தலுக்கு எம். ஏ. நூர் முகம்மது, திரு. எம். ஏ. சி. எஸ். ஏ. காதர் ஆகிய இருவரும் கட்டுப் பணம் கட்டியுள்ளார்கள்.

இன்று காலை 10 மணியளவில் பழைய கச்சேரி கட்டடத்திலுள்ள தேர்தல் காரியாலயத்தில், நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்.

### பாழடைந்த....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து பார்த்துச் செல்கின்றனர். போல்பீரிஸ் காலத்தில் உடன் வேலைசெய்த ஒரு வயோதிபப்பெரியார் வேலை செய்பவர்களுக்கு உதவியாக தனது அனுபவங்களையும், புதை பொருள்கள் காணப்படும் இடத்தையும் தெரிவிப்பதில் பெரும்உதவி செய்கிறார். வேலைகள் தொடர்ந்து ஜரூராக நடைபெறுகின்றன. கொழும்பிலிருந்து புதைபொருள் பகுதி ஆணையாளர் திரு. கொடகும்பரி இவ்விடத்திற்கு முன்னொரு முறை விஜயம்செய்து வேலைகளைப் பார்வையிட்டுச்சென்றுள்ளார்.

### தென்னிந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். தென்னிந்திய நடிகர்கள் இங்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவர் மேயர் ஆகியோரைக் கேட்டுக் கொண்டதாக அறியப்படுகிறது.

இங்கு நடைபெறவிருக்கும் நட்சத்திர கிரிக்கெட் போட்டியில் எம் ஜி ஆர். சிவாஜி கணேசன், எஸ் எஸ் ஆர், ஜெமினி கணேசன், தங்கவேலு, சந்திரபாபு, நாகேஷ், விஜயகுமாரி, சாவித்திரி, சரோஜாதேவி, கே ஆர் விஜயா, ஜெயலலிதா, சரோஜா, மனோரமா ஆகியோர் பங்குபற்ற இருப்பதாக அறியப்படுகின்றது,

நட்சத்திரப் போட்டியுடன் கலைவிழாவொன்றும் நடைபெற இருக்கிறது. இதில் கிடைக்கும் நிதி விளையாட்டரங்கைப் பூர்த்தி செய்வதற்கும் புதிய நீச்சல் தடாகமொன்றை அமைக்கவும் உதவுமென நம்பப்படுகிறது.

## ப. நே. கூ. சங்க புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, ஞாயிறு

தச்சன்தோப்பு கோவிலாக்கண்டி மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கோவிலாக்கண்டி கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சி இ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: எஸ். ஆர். பொன்னம்பலம், உப தலைவர்: திரு. அ. குமரையா, காரியதரிசி: செ. நகுலேஸ்வரா. 6 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## காணவில்லை

### சூட்கேஸ்

நேற்று (8-5-66) காலை மெயில் வண்டியில் பேராதனையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த மாணவர் ஒருவரின் 'சூட்கேஸ்' காணமற் போய்விட்டது. தவறுதலாகக் கொண்டு சென்றவர்களோ அல்லது கண்டெடுத்தவர்களோ தயவுசெய்து 'ஈழநாடு' (யாழ்ப்பாணம்) காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். 328

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org